550
2-54

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

MAY 1954

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, பங்குனி; 2—4—54 தளிர்-24

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

மலையினும் பெரியது

உலகத்தில் மலையைவிடப் பெரியது என்று எதைச் சொல்வ முடியும்? இமயம் போன்ற மலைகள் எவ்வளவு வானளாவி உயர்ந்தும், வளங்கொழித்துப் பயன்செய்தும் பெருமிதமாய்த் திகழ்கின்றன! அதைப்போல், மற்றொரு மலைகூட உலகத்தில் இல்லையே!

எங்கும் அலைந்துகொண்டிருந்தால், மலை எப்படி உயர்ந்து தோன்றும்! திண்ணிதாய்த் திகழும்? வளமுடையதாய்ப் பயன்செய்யும்! ஏதேனும் ஓரிடத்தில் நிலை நின்றால்தானே உலகுக்கு உதவமுடியும்?

உயிரினங்களிற்கூட, செடி கொடி மரங்கள் என்னும் நிலையியல் உயிர்கள், புழு பறவை விலங்கு மக்கள் முதலிய ஏனை நடமாடும் உயிர்களுக்கு மிகவும் உதவியாயிருத்தலைக் காண்கின்றோம். மக்களிற்கூடக் குடியும் குடித்தனமுமாய் ஓரிடத்தில் நிலைத்து ஒரு நோக்கமாய் இல்வாழும் நன்மக்களே பொருள் செய்தல், குடி செய்தல், விருந்தோம்புதல், ஒப்புரவு செய்தல், ஈதல், ஆட்சி நடத்துதல் முதலிய உலக உதவிகளைச் செய்யமுடிகின்றது நிலைத்தலில்லாத நாடோடிகளால் பெரும்பயன் எதும் செய்தல் இயலாதே!

இல்வாழும் நன்மக்கள்கூட, செடி கொடி மரம் பயிர் பச்சை என்னும் நின்றியங்கும் விளைவுகள் விளைத்தலாகிய உழுதொழிலைச் செய்கின்ற காலத்தில்மட்டுமே, தாமும் நிலைத்த வாழ்வுடையவர்களாய்ச் சிறந்து, பிறர்க்கு உதவிகள் செய்ய இயல்கின்றது. ஓரிடத்திலும் நிலைகொள்ளாமல் காடும் மலையும் வெளியும் சென்று சென்று சுற்றும் புறத் துறவை மேற்கொள்ளாமல், உள்ளத் துறவுடன் இல்லத்தில் நிலையாயிருந்து வாழ நன்மக்கள் நினைவுகொள்ளுதல், பிறர்க்கு உதவியாயிருக்கும் பொருட்டேயாம்.

ஆதலால், நிலைகொண்டு நிற்றலால் வளமுண்டாகிப் பிறர்க்கெல்லாம் பயனாய்த் திகழ இயலுதலின், நிலைகொண்ட மலை மதிப்புக்குரியதாகின்றது; ஆயினும், அது, அறிவறிந்து வளரும் வாய்ப்பற்றதாய் உள்ளது. நன்மக்களோ அறிவறிந்து வளரும் நிலை மிக்கவர்கள்!

அவர்கள் மட்டும் ஒரு நிலையில் நின்று உயர்ந்த நோக்கங்களுடன் உயிர்வாழ்வதானால், அவர்கள் மதிப்பு மலையினும் மாணப் பெரிது என்பதில் தடை என்ன இருக்கின்றது!

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் – உண்மை நிலையினின்று வேறுபடாது நிலைபெற்றொழுகுவானது மேன்மை, மலையினும் மாணப் பெரிது-மலையின் மேன்மையைப் பார்க்கினும் மிகவும் மேலானது.

நிலை என்றது இங்கே அவரவர் நிற்கும் நிலையில் உண்மையை உணர்த்தி நின்றது; இந்த அதிகாரம் இல்லறவியலில் இருத்தலால், இல்லறத்தின் உண்மை நிலையிலிருந்து திரியாது அடங்குதல் குறித்தது. அடங்குதல்-அதன்கண் ஒன்றியொழுகுதல்; திரியாது அடங்குதல் என்றார், வழுவாது அடங்குதல் என்றற்கு; வழுவாமை, இங்கே நுகர்ந்தவாறே வழுவாமையை உணர்த்தும். தோற்றம் என்றது, மதிப்பின் உயர்வை.

உயர்வு அகலம் திண்மை நிலை வளம் பெருமிதம் முதலியவற்றிற்கு மலை எடுத்துக் காட்டு; ஆயினும், அறிவறிந்த பெருநிலை வளர்ச்சி அதற்கு வாயாது. நிலையில் நிற்றல் மிக்க திட்பத்தாலன்றி வாயாமையின், அவனுக்கு எதனாலும் எவரானும் தோல்வியில்லை என்பதும் குறிப்பாற் பெறப்படும்.

திருவாசகத்திற் சில விடங்களில் மணிவாசகர் தம்மையும், தம் உடல் பொறி புலன்களையும், இவ்வுலகியல் வாழ்க்கையினையும் பலவாறு பழித்துரைத்துக்கொள்கின்றார்; இறையருளை எய்தாமை குறித்து மிகவும் இரங்கிப் புலம்பி வருந்துகின்றார். அதனை எய்துதற்குப் பெரிதும் வேணவாவுற்று விது விதுப்புறுகின்றார். தம்மை ஆட்கொண்ட ஞானாசிரியனைப் பிரிந்து, பிரிவாற்றாமையால் அருந்துயர் உழக்கின்றார். தம்மை நீத்து விடாமற் காத்தருள்க எனப் பலவாறு இறைவன்பால் விண்ணப்பம் செய்கின்றார். இவை போன்றனதாமும் எல்லாம் சிவானுபவம் எனப்படுமோ எனின், இன்னோரன்னவை சிவானுபவம் எனப்படாவெனினும், சிவானுபவத்தின் படிநிலைகளாம் என்றுணர்தல் வேண்டும்! ஆசிரியர் தொல்காப்பியனார் புணர்ச்சிக்கு மறுதலையாய் நிமித்தம் ஆகாத துன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல் முதலிய இருபது மெய்ப்பாடுகளையும், புணர்ச்சிக்கு நிமித்தம் ஆவனவே எனக் கூறியிருத்தல் ஈண்டும் அறியற்பாலது.

சிவானுபவத்தின் முத்திற நிலைகள்:

மேலும், தன்னை யுணர்ந்தன்றித் தலைவனை யுணர்தல் இயலாதாகலின், சிவானுபவம் எய்தும் பேறு தலைப்படும் உயிரானது, இறைவனை யுணர்தற்குமுன் அவ்விறைவனது திருவருள் உதவியால் தன் உயிரியல்பினை முதற்கண் உணரப்பெறும். அங்ஙனம் திருவருள் உதவியால் தன்னியல்பினை உணர்ந்த வழியே உயிர்க்குத் தனது சிறுமையும் இழிவும் புலனாகும். தனது சிறுமையும் இழிவும் புலனாகிய வழியே உயிரானது, அவற்றைத் தனக்கு உணர்த்திய திருவருளின் அருமை பெருமைகளை உணரப்பெறும் நிலையுற்று, அதனை அடைதற்கு ஆரா இயற்கை அவாவுற்றுப் பெரிதும் முயலும். அதன் பயனாகப் படிமுறையே திருவருளைப் பெற்றுச் சிவத்தொடு கூடிச் சிவானுபவம் நுகரும். இவ்வுண்மையினை, "உயிரனுபவம் உற்றிடில் அதனிடத்தே ஓங்கு அருளனுபவம் உறும்; அச் செயிரில் நல் அனுபவத்திலே சுத்த சிவ அனுபவம் உறும்" எனத் தமக்குத் திருஞானசம்பந்தப் பெருமான் உணர்த்தியருளியதாக இராமலிங்க அடிகள் கூறுதல் பற்றி யாவரும் உணரலாம். எனவே, திருவாசக நூல் முழுமையும் சிவானுபவ விளக்கமே நிகழ்தல் தெளியப்படும். அடிகள் அடைந்த சிவானுபவத்தின் முடிந்த முடிபான நிலையினை அச்சோப் பதிகம் மிக இனிமையாக முழக்கமிட்டு மிழற்றுகின்றது.

திருவாசகம் விளக்கும் சிவாநுபவச் சிறப்பு:

இங்ஙனம் சிவானுபவத்திற்குரிய மெய்ப்பாடுகளை முதன் முதற் கூறியவர் மணிவாசகரேயாவர். புறப் பொருள்களைக் கண்டறிதலும், காதலின்பம் பற்றிய அக நிகழ்ச்சிகளை உற்றுணர்தலும் உலகிற் பெரும்பாலான மக்களுக்கு இயல்பாக எளிதின் முடிவதேயாக இறையருளனுபவ இன்ப உணர்ச்சிகள் தம்பால் நிகழ அவையிற்றைத் தாமும் நுகர்ந்து இனைத்தென உணர்ந்து பிறர்க்கு வெளியிட்டுணர்த்தும் திறம், பல கோடி உலக மக்களுள் எப்பொழுதோ சில சமயங்களில் தோன்றும் சான்றோர் ஒருவர் இருவர்க்கே மிகவும் அரிதிற் கைகூடுவதாகும். ஆதலின், சிவானுபவப் பெருஞ் செல்வராகிய மணிவாசகரின் அருமை பெருமைகளை உணர்ந்து அவர் தம் திருவாசகத்தினை இடையறாது ஓதி, நாமும் அவர் தம் சிவானுபவத்தில் நூறாயிரத்தொரு கூறேனும் இனி வரும் பிறவிகளிலாதல் பெறுவதற்கு முயலுவோமாக!

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்



பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)

இரக்கம், பிறர் பொருள் விழையாமை, இதம்!

வன்மை, பொறை, தூய்மை, துன்பத்துக் கஞ்சாமை, அழுக்காறின்மை; இறுமாப்பின்மை!

இவையே இறைப் பண்புடன் பிறந்தவரின் உடைமைகள். உயிர்கள் உலகில் இருவிதம் இயங்குகின்றன. இறைத் தன்மையோடும், பேய்த் தன்மையோடும்.

பேய்த் தன்மை உள்ள மக்கள் உரிய சக்தியையோ அல்லது உரிய புலனடக்கத்தையோ அறியார்; தூய்மை, நன் நடக்கை, இவைகளைத் தெளியார். அவர்களிடம் உண்மை இல்லை

தன்னலத்துக்கும், பதவிக்கும் தீமைக்கும், அவாவுக்கும், சீற்றத்துக்கும் உட்பட்டு இத் தீயோர் என்னைப் பிறர் உடல்களிலும், தங்கள் உடல்களிலும் வெறுக்கின்றனர்.

இருளுலக வாயில்கள் மூன்று; அவா, சினம், பேராசை; அது தன்னையே (ஆத்மாவை) அழிப்பது. எனவே மக்கள் இவற்றை வெறுப்பார்களாக!

எது செய்யத்தக்கது செய்யத் தகாதது என்று நிர்ணயிக்க, மறைநூல்கள் வழி காட்டும்; அவை வகுத்த நெறியே பின்பற்றி நீ இவ்வுலகில் இயங்க வேண்டும்.

—பா. வரதராசன்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

திருவாசகமும் சிவானுபவமும்

புலவர் முருகவேள். B. O. L.

(முன் தொடர்ச்சி)

திருவண்டப் பகுதியில் சிவானுபவத் திறங்கள்:

"கடவுள் எனக்குக் தடக்கையின் நெல்லிக்கனி ஆயினன். அவன் என்பாற் செய்த பேருட்டிறனை யான் சொல்லும் வகையறியேன். நாயை ஒத்தவனை அடியேன் அவ்வருட்பேரின்பத்தினைத் தாங்குதற்கு இயலாதுளனேன். ஐயோ! நான் இறந்தேன். எம்பெருமான் என்னைச் செய்தவகை இன்னதென்று அறிகிலேன். அவன் எனக்கு அருள் செய்தது எதன் பொருட்டு என்பதும் எனக்குத் தெரியவில்லை. இறைவன் அருளிய பேரின்பத் தேறலை யான் குடித்தும் நிறைவு பெறேன், விழுங்கியும் பொறுத்துக் கொள்ளமாட்டேன். செழுந் தண் பாற்கடலின் திரைகளைப் போல, மிகத் தூயதும் மேன் மேற் பொங்கி வழிவதுமாகிய பேரின்பம் அவனால் எனக்குக் கிடைத்தது. நிறை நிலாக் காலத்தில் கடலின் நடுவிலுள்ள நீரைப்போல, சொல்லின் எல்லையைக் கடந்த பேரின்ப அமுதமானது என் உள்ளமெல்லாம் முழுவதும்—ததும்பி, மயிர்க்கால் தோறும் தேக்கிடுமாறு அவன் செய்து விட்டனன். நாய்போல இருந்த என்னுடம்பினுள்ளே அவன் எழுந்தருளிச் சிறுவீடு அமைத்துக்கொண்டு, கொடிய வஞ்சிய எனது ஊன் மிகுந்த உடம்பெல்லாம் இனிய தேனைப் பாயச் செய்து, யான் இதற்கு முன் அறியப் பெறாத புதுமை மிக்க அமுத ஒழுக்கினை எனது எலும்பின் துளைகளிலெல்லாம் ஏறும்படி செய்தனன். உருகும் இயல்பிற்றாகிய உள்ளத்தினையே ஒரு வடிவமாகச் செய்ததுபோல எனக்கு முழுவதும் உருகும் உடம்பை அமைத்து வைத்தான். ஒன்றுக்கும் பற்றாத என்னையும் மதக்களிப்பு மிக்க ஆண் யானை போல மிக மேலான பேரின்பத்தில் நிலை பெற்றிருக்குமாறு செய்துவிட்டான். நான்முகனும் திருமாலும். அறிந்துகொள்ள மாட்டாத பெருமையினனாகிய அவன், என்னுள்ளே அருளாகிய தூய தேன் கலவாநிற்க அதனோடு மிக்க அமுதத்தினை இயைத்தருளினான்" என்னும் பொருள்பட, திருவண்டப்பகுதி எனும் திருவகவலின்கண் தமது சிவானுபவத் திறனை எத்துணை அழகுற எடுத்த மொழிந்துள்ளனர்! இங்ஙனம் "சிவானுபவமே சுவானுபூதிகமாம்" பெருவாழ்வு பெற்றுச் சிறந்த மாணிக்க வாசகரின் மாட்சிமையை என்னென்பது?

திருவாசகம் முழுதும் சிவானுபவ விளக்கமே:

இங்ஙனம் ஒரோவோரிடங்களில் மட்டுமேயன்றித் திருவாசகம் முழுவதுமே மணிவாசகரின் சிவானுபவத் திறங்கள் வெவ்வேறு வகையில் வெளியிடப் பெற்றுள்ளமை செவ்விதிற் றெளிந்து மகிழ்தற்குரியதாகும்.

அருள் துறை

கீதை

14. முக்குணங்களின் பாகுபாடு:

கண்ணன்:- முக்குணங்கள் (இராஜசம், தாமசம், சாத்விகம்) பொருளடியாகப் பிறப்பவை; உடலில் பிணிக்கப் பெற்றவை; உடலுள்ளளவும் அழியாது நிலைப்பன.

சாத்விகம், அருளைப் பிணிக்கும்; இராஜசம் செயல்முகப் படுத்தும். தாமசம் அறிவை மறைத்து ஆணவத்தைக் கூட்டுவிக்கும்.

சாத்விகத்தின் மிகுதியால் ஞான ஒளி உடலில் எல்லா வாயில்களிலும் வெளிப்படும்.

அவா, பயனின்றிச் சக்தி இழப்பு, செயல் மேற்கோள், அமைதி இன்மை, பேராசை இவைகள் இராஜசத்தின் மிகுதியால் விளைவன.

அறியாமை, தேக்கம், ஆணவம், மருட்சி; இவை தமோ குணத்தின் மிகுதிப்பாட்டால் எழுவன.

பார்த்தன்:- ஐயனே! இம் முக் குணங்களை வென்றாரின் குறிகளென்ன?

கண்ணன்:- நடுவு நிலையில் நிலைத்திருப்பவன், இம் முக் குணங்களால் தாக்கப்படான்; இன்ப துன்பத்தில் ஒத்த நிலை கொண்டு தளரா உறுதியுடன் நிற்பான்; தன்னம்பிக்கை உள்ளவன்; அவனுக்கோ மண்ணும் பொன்னும் ஒரு தன்மையன; அன்பரும் அல்லாதாரும் ஒன்றே; உறுதி உள்ளவன்; புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும், ஒரு நிலையினன்; இவனே முக் குணங்களை வென்றவன்.

முக் குணங்களை வென்று, யோக சாதனையால் எனக்குத் தொண்டு செய்பவனே அழியாத் தன்மை எய்தத் தகுதியுள்ளவன்.

15 தலையாய சக்தி

கண்ணன்:- வேர்கள் மேலும், கிளைகள் கீழும் உள்ள 'அஸ்வதா' அழியாததென்று சொல்லப் பெறும். (இது, ஆல் இனத்தைச் சேர்ந்த ஒரு வகை மரம். இஃது இங்கு உயிரின் இவ்வுலக வாழ்வுக்கு உருவகம்.) அதன் இலைகள் வேதங்கள்; அதை அறிந்தவன் வேதத்தை உணர்ந்தவன்.

முக்குணங்களே இம் மரத்திற்கு உரம்; கன்மத் தளைகளே இதன் வேர்; தெளிதற்குகந்த அறிவே அதன் மொட்டுகள்; அதன் கிளைகள் கீழ் நோக்கியும், மேல் நோக்கியும் (பல்வேறு உயிர் வர்க்கங்களாக) பாவுகின்றன.

இப்புதுமையான வேர் கொண்ட 'அஸ்வதா'வைப் பற்றின்மை என்னும் நெறி பிறழாத வன்மை மிக்க கருவி கொண்டு வெட்டி வீழ்த்தினால், திரும்பி வாரா நிலையை அடையலாம். எந்த நிலைமை அடைந்தபின் திரும்ப மீளுவதில்லையோ அதுவே தலையாய நிலை.

மனம், ஞானேந்திரியங்களில் ஆறாவது கருவி. அது சடப் பொருளின் விளைவு. இந்த அறி கருவியைச் சுற்றி இயங்கும் உயிர் அழியாததும், என்னில் ஒரு பகுதியானதுமாகும். அதுவே இவ்வுலகத்தில் வந்துள்ளது.

நான், வாழ்வின் உயிர்ப்பாய், சுவாசிக்கும் பொருள்களின் உடல்களை ஆட்கொள்ளுகிறேன். உயிர்ப்புக் கொடுக்கும் பிராணனுடன் ஐக்கியப்பட்டு. நானாவித உணவுகளையும் நீராக்குகின்றேன்.

இவ்வுலகில் இரு சக்திகள் உள; அவை அழிவதும் அழியாததும்; மாறுவன யாவும் அழிபவை; மாறாததே அழியாதது.

ஆனால், உயர்ந்த சக்தி வேறு; அதுவே பரப்பிரம்மம்; அவனே மூவுலகங்களின் உயிர்ப்பாய் வியாபித்துள்ள அழியாத தலைவன்.

இப்படித் தெளிவுற்று என்னையே பரப்பிரமமாக உணர்ந்தவன், எல்லாமறிந்து உள்ளமார என்னை வத்திக்கின்றான்.

மாசு நீங்கியவனே! ஆதி மறையான போதனை இப்படி என்னால் போதிக்கப்பட்டது. இதை அறிந்தவன் வினை ஒய்ந்தது.

16. ஆக்கும் அழிக்கும் சக்திகள்

அஞ்சாமை, தூய வாழ்வு, யோக ஞானத்தில் உறுதி, கொடை, தன்னடக்கம், தியாகம், வேதாகமங்களில் தெளிவு, நேர்மை, எளிமை!

தீதின்மை, உண்மை, சினமின்மை, பற்றின்மை, அமைதி, திருந்திய அறிவு, உயிர்களிடம்

உலகின் சிறிய சன்மார்க்கத் தலைவர்கள்

2 சரதுஷ்டிரன்—ஆரிய மக்களின் தலைவன்

கி. மு. 1000 (Zarathustra)

(பா. வரதராசன்)

இந்திய நாட்டின் ஆதி குடிகளாகிய திராவிட மக்களின், சிந்துவெளி நாகரிகம் ஓய்ந்து ஓராயிரமாண்டுகள் இருக்கலாம். அப்போதுதான் இந்திய நாட்டுக்கு ஆரிய மக்கள், வளம் பொருந்திய புற்றரைகளை நாடி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் இந்திய நாட்டை நோக்கி வருமுன்னர், சிந்து நதிக்கும் கார்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் பாரசீக வளைகுடாவிற்கும் இடைப்பட்ட நாடாகிய ஈரானில் வந்து வேரூன்றி இருந்தனர்.

பல்லாயிரமாண்டுகளுக்கு முன் மத்திய ஆசியாவில் வால்கா நதிக் கரையில் கால் நடைகளைப் பேணி வாழும் அளவுக்கு நாகரிகமடைந்த பண்டைய ஆரியர், காலப் போக்கில் தெற்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் பருவந்தோறும் பரவிவந்தனர். இப்படிப் பரவிவந்து ஒரு காலத்தே ஈரானில் தங்கினர். இந்தக் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த ஒரு பகுதியினரே இந்திய ஆரியர்.

அக்காலத்தில் ஈரானில் நிலைகொண்ட ஆரியக் கூட்டமே, பிற்றை நாட்களில் பாரசீகர் எனப்பட்டனர். அவர்களுடைய வேதங்கள் 'அவஸ்தா' என்றழைக்கப்படும். அது எல்லார்க்கும் உரிய ஒரு பொது வழிபாட்டு நூல். அதில் சில புராண வரலாறுகளும் பழைய புகழ்ப் பாடல்களும், பல பழைய அறிவுரைகளும் அடங்கியுள்ளன.

இந் நூலிலிருந்து, அக்கால மக்கள் ஒரு கடவுளை வணங்கியதாக நாம் அறிய முடியாது. வழிபாட்டுக்குரிய பல கடவுளர்களின் பட்டி அதில் காணப்படும். அக்காலத்தில் ஈரானின் சமயம் பல் சமயக் கோட்பாடுகளைக் கொண்ட ஒரு கதம்பமாக இருந்தது.

இந் நிலையில் தான் சரதுஷ்டிரன் (Zarathustra) என்னும் ஆரிய மக்களின் தலைவன் தோன்றி, தன் எளிய தன்மையால் ஒரு கோட்பாட்டை நிறுவினன்.

சரதுஷ்டிரனின் காலம் இன்னும் வரையறுக்கப்படவில்லை. பல ஆசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் பற்பல காலத்தை நிர்ணயித்துள்ளனர். எனினும் கி. மு. 1000 என்பதுதான் ஒருவாறு ஒத்துக்கொள்ளப் படுகின்றது.

அவர் பிறந்த பகுதி 'மிதியா' எனப்படும். அவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் கிடையாது. கீழ் நாடுகளின் மறை நூல்களை ஆராய்ந்த டாக்டர் மேயரைப் போன்ற (Dr E. Mayer) சில அறிஞர்கள், சரதுஷ்டிரனை ஒரு புராணத் தலைவன் என்று கூறுகின்றனர். பின்னும் சிலர், வரலாற்று உண்மை புலப்படும் அளவுக்கு, கற்போரின் உள்ளம் நிலைக்கும் வகையில் அவரைப் பற்றிய குறிப்புகள் கொடுத்துள்ளனர்.

இக் குறிப்புகளெல்லாம் அக்காலத்தில் அந்நாட்டு மக்களிடையே நிலவியிருந்தபொருந்தாப் பழக்க வழக்கங்களை எதிர்த்து நடத்திய ஓர் இயக்கத்தையும் தெரிவிக்கின்றன. சரதுஷ்டிரனின் வாயிலாகக் காணப்படும் ஒரு கோட்பாடே பாரசீக மதத்தின் நடுநாயகமாக உள்ளது.

சரதுஷ்டிரனுக்குமுன், பாரசீக நாட்டின் சமய நிலை, இந்திய நாட்டின் இருக்கு வேத கால, ஆரிய சமயத்தைப் போன்றதாகும். ஆரிய வேதங்களில் காணப்படும் பற்பல எண்ணங்களும் உருவங்களும் பாரசீகத்திலும் காணப்படுகின்றன. இந்திய நாட்டிலிருந்ததைப்போன்றே வருணனும், அனல் கடவுளும், பாரசீகத்திலும் இருந்தனர். இத் தேவர்களைத் துதிப் பாடல்களால் வழிபடுவதும் அவர்களுக்கு அர்ப்பணிப்பதும் இந் நாடுகளிலும் பொதுவாயிருந்தன. சோமப் பூண்டின் மதுவும் இரு நாட்டிலும் பொது. இவ்வொற்றுமைகளால் நாம் அறிவதாவது: அக்காலப் பாரசீக நாட்டுச் சமயமும் வட இந்திய சமயமும் ஒரு பொதுக் கோட்பாட்டினின்றும் வழக்கங்களிலிருந்தும் உருவானவை என்பதே.

சரதுஷ்டிரனின், நூல்களும் உரைகளும் 'கதா' என்றழைக்கப்படும். இவை, பாராயணம் செய்யப்படும் வடமொழி வேதப் பாக்களைப் போன்றவை. அவை வரலாற்றைப்போல் வெறும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கடிவாளம் போட்டதுபோல் என் சிரிப்பு தடைப்பட்டது. சிரிப்பதிலும் நான் தோல்வி கண்டேன்.

என் நண்பன் முகத்தைப் பார்த்தபோது அது சோர்ந்து கிடந்தது. அவன் கவலைப் படுகின்றான் என்று புரிந்துகொண்டேன். உடனே வந்தவன் முகத்தை நோக்கினேன். அவன் சிரிக்கவும் முடியாமல், சிரிக்காமலிருக்கவும் முடியாமல் தோல்வியும் கவலையும் சேர்ந்தவனாகக் காணப்பட்டான்.

என் நண்பர்கள்

(நாராயணசாமி)

'வாழ்க்கையில் தோல்வி. எங்கும் தோல்வி. பார்க்கும்இடமெல்லாம் தோல்வி. கேட்பதெல்லாம் தோல்விப் பேச்சு. செய்வதெல்லாம் தோல்வி தரும் செயல். நடை, தோல்வியடைந்த தள்ளாடிய நடை. உடை, பார்த்ததுமே தோல்வியடைந்தவன் என்று காட்டக் கூடியது. உடலோ, தோல்விக்கு அறிகுறியாகும்; வெற்றி பெற்றவன் என்று எண்ணவேண்டாம் என எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது. வசிக்கும் இடமோ தோல்வியைத் தேடித்தரும் சோகமான இடம்; நடக்கும் பாதையோ தோல்வியின் உச்சியில் கொண்டுபோய் விடும்படியானது. மூச்சுவிடுவதிலும் தோல்வி. உணவோ சத்தற்ற உணவு அதை அள்ளி உண்ணும் கரமோ, தோல்வியடைந்து சோர்ந்துபோன கரம்; முகமோ தோல்வி உள்ளத்தைப் பளிச்செனத் தெரிவிக்கும் தெளிவற்றது; களை யிழந்தது.

இப்படி என்னைப்பற்றி எழுதவேண்டுமென்று எண்ணியவாறே அந்தப் பாலத்தின் மீது அமர்ந்தேன். அதற்குள் அங்கு ஒருவன் வந்தான். அவனும் ஏறக்குறைய என் மாதிரியே இருப்பான். ஆனால் அவன் தோல்வியடைந்தவனாகத் தெரியவில்லை. நடை, உடை, பாவனை யெல்லாம் சரியாக இருந்தது. ஆனால் அவன் பேச்சை ஆரம்பித்ததும், எதையோ உள்ளே மறைத்துப் பேசுபவனாகக் காணப்பட்டான். அடிக்கடி பெருமூச்சுவிட்டான். எதைப்பற்றியோ கவலைப் படுபவனாக இருந்தான். அவன் பார்வை அதை எடுத்துக் காட்டாவிட்டாலும், முகம் ஒருவாறு வெளிப்படுத்தியது. ஆனால் அவன் அவற்றை மறைப்பவன்போல் அடிக்கடி முகத்தை மலரவைக்கப் பிரயத்தனப்படுவான்; அது முடியாது போயிற்று. இதைக் கண்ணுற்ற நான் கேட்டே விட்டேன். அவன் பின் வருமாறு கூறினான்.

'என் உடல் கவலையினாலேயே மெலிந்துவிட்டது. முகம் கவலையால்கருத்துச்சோர்ந்துவிட்டது. மனம் கவலைப்பட்டுப் பட்டுச் சோர்ந்து விட்டது. கண்களும் களையிழந்து ஒளி மங்கிவிட்டது. கை கால்கள் சோர்ந்துவிட்டது. ஆனாலும் அதையெல்லாம் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக மிகவும் பிரயாசைப்படுகிறேன். ஆனால் மூடி வைக்க முடியவில்லை' என்று, நிறுத்தினான். அவன் முகம் இப்பொழுது கவலைக் கிணற்றில் மூழ்கி எழுந்ததுபோல் இருந்தது.

தோல்வி தரும் என் கைக் குட்டையைக் கொடுத்தேன். அவன் வாங்கிக் கவலை ஆழ்ந்த முகத்தை ஒரு முறை துடைத்தான். மீண்டும் அவன் சொல்லலானான்.

'நான் தூங்கி எழும்போது கவலையாகிய என் நண்பனும் உறங்கி எழுவான். ஆனால் என்னைவிட அவன் அயர்ந்து தூங்கி எழுவதால் புதிய உற்சாகத்துடன் என்னைத் தாக்குவான். உடலும், உள்ளமும் மெலிவடைந்த நான் அவன் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறுவேன் என் பரிதாப நிலையைக் கண்டு அவன் சற்று நிதானிப்பான். அப்பொழுதுதான் நான் முகம் மலர்ந்து, ஆனந்தமாக இருப்பேன். அவன் ஓய்வெடுத்துக்கொள்ளும் அந்த ஒரு நிமிடம்தான் எனக்கு இன்பம் அனுபவிக்கும் நேரம்; அதற்குள் பலகோடி எண்ணங்கள் எண்ணுவேன். எண்ணி ஒரு முடிவிற்கு வருமுன் மீண்டும் என் நண்பன் வந்துவிடுவான். என் எண்ணங்கள் பறந்தோடும். எப்பொழுதும் நான் கவலை பிடித்தவனாகவே இருப்பேன்' என்று அவன் நிறுத்தினான்.

'ஆமாம்! உனக்கென்ன' என்றான் அவன்; 'எனக்கு எல்லாம் தோல்வி' என்றேன் நான். 'உன் பேச்சே எனக்குத்தெரிவிக்கிறது' என்றான். என் முகம் சுண்டிவிட்டது. வேகமாக எழுந்து செல்ல முயன்றேன். அதற்குள் இன்னொருவன் அங்கே வந்து சேர்ந்தான். என்னைத் தடுத்து நிறுத்தினான். கோபத்திலும் தோல்வி கண்டேன் நான்.

அவன் முகம் சோர்ந்திருந்தது. அவன் உடலும் மெலிந்திருந்தது. அவன் ஆடையும் என் ஆடை போலவே இருந்தது. அவன் பார்வையும், பேச்சும் என் மாதிரியே இருந்தது. அவனைக் கண்டதும் நான் என் நிலைமையை ஒருவாறு புரிந்துகொண்டேன். அவன் மெலிந்த உடலும் களையிழந்த முகமும் பரிதாபப் பார்வையும், என் கவலை ஆழ்ந்த நண்பன் சாயலைக் காட்டிற்று. அவன் பார்த்ததுமே, அவன் நிலையை ஒருவாறு புரிந்துகொண்டான். உடனே, 'உனக்கென்னப்பா' என்றான்.

வந்தவன் கூறத்தொடங்கினான்: "நான் எது செய்தாலும் எனக்கு வெற்றி கிடைப்பதில்லை அதனால் சந்தோஷமும் எனக்கில்லை. எனவே நான் தோல்வியும், கவலையும் சேர்ந்த மனிதனாக இருக்கிறேன் என்றான்.

உடனே, எனக்குச் சிரிப்பு வந்தது; ஆனால் அது மனம் விட்ட சிரிப்பாக இல்லை. முகம் கனிந்த சிரிப்பாக இல்லை. குதிரைக்குக்

என்று எண்ணி இப்போது விலைக்கு வாங்க இயலாது திருப்பித் தரும்படி கொடுத்தால் நல்லது என்றேன். அப்படியே செய்யுங்கள் புதிதாகவே ஒன்று எழுதிக் கொடுக்கின்றோம் 25-ந் தேதி வந்துவிடுங்கள் என்றார்கள். எல்லாம் தொலைபேசியில் தான்.........நேரில்தான் தெரியாதே! விழாவுக்கு 4-5 நாட்களிருந்தன. 25-ந் தேதி போக இயலவில்லை. அரைகுறை நம்பிக்கையோடு 26-ந் தேதி மீண்டும் தொலைபேசியிலேயே கேட்டேன் 27-ந் தேதி மாலை வந்து படத்தை எடுத்துக்கொண்டு போகலாம் என்றார்கள். மெய்ம்மறந்து போனேன். 27-ந் தேதி மாலை இரண்டு அன்பர்களைக் கடிதத்தோடு அனுப்பினேன். அவரிதைக் கண்டபின்பு தான் படம் எழுதத் தொடங்ினார்களாம் 28-ந் தேதி காலை வரும்படி சொல்லியனுப்பிவிட்டார்கள்.

என்ன வியப்பு! எப்படியோ 27-ந் தேதி இரவே படத்தை எழுதி முடித்து (திரைச் சீலையில், எண்ணெய் வண்ணத்தில், பெரிய அளவில், எடுப்பான முறையில்) சட்டமிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். 28-ந் தேதி காலை அன்பர்கள் போனதும் தம் அன்பும் ஆர்வமும் புலப்படக் குருகுலத்துக்கு அப் படத்தை அன்பளிப்பாய் வழங்குவதாகக் குறிப்பிட்டு ஓரினிய கடிதம் எழுதிக் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இது எழுதுகிறவரையினுங் கூடப் 'பாலு ஓவியர்களை' அறியாத நிலை எங்கள் நிலை; இருந்தும் அவர்களை இரந்தது உண்மையில் ஓர் எருடைச் (அழகிய) செயலாக, இன்ப நிகழ்ச்சியாகத்தானே முடிந்திருக்கிறது.

குருகுல விழாவில், திருவள்ளுவர் படம் மிகவும் கம்பீரமாகத் திகழ்ந்தது! குருகுலத்தில் நாளும் திகழ்ந்து வருகின்றது! விழாவுக்கு வந்திருந்த தலைவர்கள் அறிஞர்கள் அனைவரும் அதன் எழிலையும், எழுதினோர் கலைத் திறனையும் அன்பையும் மிகவும் வியந்து வியந்து பாராட்டினர்! பாலு ஓவியர் திறம் பார் அளாவியது!

முன்பின் அறியாதவரிடமே இப்படிப் பழகும் அவர்கள் அறிந்தாரிடம் எப்படிப் பழகுவார்களோ? அவர்கள் பழக்கம் எவ்வளவு இனிமை செய்யுமோ? உண்மைக் கலைஞர்கள்! உணர்ச்சி மிக்கவர்கள்!!

எல்லாவற்றிற்கும் அவர்களின் உயர்ந்த பண்பாடும் குருகுலத்தின் அடிப்படையுமே காரணம். கொடுப்பவர்களும் இப்படிப்பட்டவர்களாகக் கேட்பவர்களும் தக்கவர்களாயிருந்தால் இரப்பிலும் இன்பம் ஏன் பிறக்காது?

இந்த இரவு பற்றிய திருக்குறளை எத்தனை முறைதான் திருப்பித் திருப்பி ஓதினாலும் பரிமேலழகர் போன்ற சிறந்த உரையாசிரியர்களின் உரைகளோடு பயின்றாலும் உண்மை அடைவுப் (அனுபவப்) பொருளை நாம் உளமார உணர முடியுமா? பாலு ஓவியர்களின் உயர்ந்த பண்பாட்டினால் மேற்குறிப்பிட்ட இந்தக் குறளைமட்டுமென்ன? திருக்குறள் எல்லாவற்றையுமே அவற்றின் இணையற்ற மெய்ப் பொருள்களோடு உணரும் நிலை, அவைகளைப் படித்துப் படித்து விரித்து விளக்கிக் கொண்டிருப்பதைவிட அப்படியே செயல்முகப்படுத்தி வாழ்க்கையோடு இணைத்துக் கொண்டால்தான் கிட்டும் என்னும் உண்மையையும் இந்நிகழ்ச்சி நன்றாக உணர்த்துகிறதல்லவா? குருகுலம் இவ்வடிப்படையில் தானே திருக்குறட் செயலகமாக மலர்கிறது.

வாழ்க குருகுலம்!
வாழ்க பாலு ஓவியர்கள்!!
வாழ்க அவர்கள் கலை!!!

—ஆடலரசு.

(5ம். பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளைக் கூறு. சாரதுஷ்டிரானின் உரைகளைக் கவிதை என்னும் உடையால் அணி செய்து சமயப் பேருரைகளாகக் கொண்டனர். அவை, பொருள் பொதிந்தவை; உணர்வுக் களஞ்சியம்; கலைத்திறன் அற்றவை; பொருளின் தொடர்பை உணர, அவற்றைக் கற்போருக்கு அளவு கடந்த பொறுமையும் முயற்சியும் தேவை. ஒருபோது அவற்றின் பொருளை உணர்ந்தால், அவை ஆழமும் உள்ளுணர்வும் கொண்டுள்ளதைக் கற்போர் கண்டு வியப்புறுவர்; ஒரு பெருஞ் சமயத் துவக்கத்துக்குரிய இலக்கியமாக ஒப்புக்கொள்வர்.

சாரதுஷ்டிரனின் உணர்வுகளே பாரசீக சமயத்தின் நிலைக்களன்.

அதன் தத்துவம்: உலகத்தின் தோற்றத்தைப் பற்றியது; எப்படி இப்பொருளுலகம் எழுந்தது?

அதன் கோட்பாடு: துவைதம் ஆனால் பிற்காலத்தைப் போன்று வளர்ச்சி அடைந்த நிலையிலன்று; மானசீகமான தெளிவற்ற ஓர் உருவத்தில் அமைந்துள்ளது.

அவர் தத்துவம்: நாட்டு மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தி, பிற்காலத்தில் பாரசீக சமயத்தின் முக்கிய உறுப்பாக விரிந்தது.

சமய வளர்ச்சியில், உரிய காலத்தில் நேர்ந்த ஒரு முன்னேற்றமாயும் உள்ளது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	விசய, பங்குனி,	தளிர்
6	9-4-54 வெள்ளி.	25

"இரப்பு மோர் ஏஎருடைத்து"

(பாலு ஓவியர்களின் பண்பாடு)

இது திருக்குறள் வாக்கு! "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று சினந்து கூறிய திருவள்ளுவரின் திருவாக்கு தான். அவர் "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று" என்றும் "பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்றும், பயனை நோக்கிப் பொய்மைக்கும் ஒரு பெருமை, வாய்மைக்கும் ஒருவிளக்கம் கருதினார் அல்லவா? அதே போக்கில் "இரத்தலின் இன்னாததில்லை" என்று கூறியபின் அவ்விரப்பிலும் ஓர் அழகிருக்கிறது என்று 'இரவு' என்னும் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்!

அதோடு விட்டாரா? "இரத்தலின் இன்னாததில்லை" என்று கூறிய அவர், "இரக்க! இரத்தக்கார்க் காணின்" என்று இரக்கும்படி தூண்டியும் விடுகின்றார். "இரத்தலும் ஈதலே போலும்" என்று மேலும் ஊக்குகிறார்.

இவ்வாறெல்லாம் அவர் முன்னுக்குப் பின் முரண்பட்டன போன்ற சில குறள்களை எழுதி வைக்கக் காரணம் என்ன? எத்தகைய வாழ்க்கை அடைவுகள், சூழல்கள் அவரை இவ்வளவு நுட்ப நிலை ஓர்ந்துணர்ந்து நுவல வைத்திருக்கும்? என்று ஓரளவு தெளிதற்குதவியது, அண்மையில் சென்னையில் நடைபெற்ற குருகுல விழாவின் போது நிகழ்ந்த ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சி!

சென்னையின் சிறந்த ஓவியர்களாகிய "பாலு சகோதரர்கள்" குருகுல விழாவின்போது திறந்து வைப்பதற்குத் திருவள்ளுவர் திருவுருவப் படம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கிய நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகின்றேன்.

இதை இவ்வளவோடு நிறுத்திவிட்டால் இந் நிகழ்ச்சியை அளவுக்கு விஞ்சி ஏற்றிப் போற்றுவதாகவே அன்பர்கள் எண்ணுவார்கள். ஆதலின் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கின்றது.

ஆசிரியரோ, குருகுலத் தொண்டர்களோ, பாலு ஓவியர்களை நேரில் அறியார்கள். நம் குருகுலம் திருக்குறள் அடிப்படையில் இயங்குவதாகலின் அதன் விழாவில் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சில படங்களை விழாவிடத்தில் வைப்பது நல்லது என்று என் நண்பர் திரு. இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார். சென்னையின் உயர்தர ஓவியர்களாகிய 'பாலு சகோதரர்கள்' (2. தயார் சாகிப் தெரு, சென்னை) அத்தகைய படங்கள் பல எழுதியிருப்பதையும் நினைப்பூட்டினார். யானும் அது பற்றி முன்னரே அறிந்திருந்தேன். அதோடு அவர்கள் நல்ல முற்போக்கும் தமிழ் ஆர்வமும் உடையவர்கள் என்றும் ஒருவாறு தெரிந்திருந்தேன். கலை நோக்கத்தையே அடிப்படை.யாகக் கொண்டு அவர்கள் எல்லாருடனும் நெருங்கிப் பழகுவதையும் நான் கவனித்திருக்கின்றேன். ஆதலின், அவர்களை நான் நேரில் அறியேனாயினும், குருகுலச் சார்பில் கடிதம் எழுதி அப் படங்களை ஒரு நாளைக்கு இலவசமாக உதவினால் நன்றாக இருக்கும் என்று கேட்டேன். இரண்டு நாள் கழித்து நண்பரின் தூண்டுதலின்மேல் தொலை பேசி (டெலிபோன்) வழி அவர்கள் கருத்தறியவும் முற்பட்டேன், பெரும்பாலும் நம்பிக்கையின்றியே. ஏனெனில் பொதுவாகக் கலைத்துறையில் சிறந்த பெயர் வாங்கியிருக்கிறவரை இக்காலத்தில் எளிதாக அணுக முடிவதில்லை அல்லவா?

விரும்பிய படங்கள் எல்லாம் கொழும்புவில் நடைபெறும் கண்காட்சி ஒன்றுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்கள். விழாவில் வைப்பதற்குத் திருப்பித் தந்து விடுகிற முறையில் திருவள்ளுவர் படம் ஒன்று மட்டும் கொடுத்தாலும் போதும் என்று தெரிவித்தேன். அது கூட இல்லை; வேண்டுமானால் புதிதாக எழுதித் தருகிறோம் என்றார்கள். விலைக்குத்தானோ